திரு. வே. இரா. ஜெயராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியாறு–வைகை சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற உபரியாக கிடைக்கின்ற தண்ணீர் மூலமாக வறட்சிபிரதேசமாக இருக்கின்ற 7 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறப்படும் என்று தெரிவிக்கப்பட்டது. மேலும் இப்போது 40 ஆயிரம் ஏக்கர் பொதுவாக பாசனம் பெறும் என்று சொல்லப்பட்டிருப்பதால், இதை (alternative) அல்டர்நேட்டிவ் முறையில்—அதாவது ஒரு போகத்திற்கு ஒரு பகுதியும், இன்னொரு போகத்திற்கு இன்னொரு பகுதியும் பலன் பெறுகின்ற வகையில் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்தின் ஆயக்கட்டுகளுக்குக் கொடுப்பது போல் இங்கும் கொடுப்பதற்கு செயற்குறிப்பு ஏதேனும் அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு: பேரவைத் தலைவர் அவர்களே, தேனி தொகுதியைப் பொறுத்தவரையில், ஏற்கனவே அங்குள்ள பி. டி. ராஜன் வாய்க்கால் மூலமாக அதிகமான அளவில் பாசனம் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறது, மேலும் அந்தப் பகுதியில் பாசனத்தை அதிகப்படுத்துகின்ற அளவில் வைகை—பெரியாறு சீரமைப்புத் திட்டத்தின் மூலமாகக் கிடைக்கின்ற தண்ணீரை, பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதிகளில் கொடுக்கப்பட்டு வருவதைப்போல் தண்ணீர் கொடுக்க ஆரம்பித்தால், ஏறத்தாழ 2, 3 ஆண்டுகளுக்கு ஒரு முறைதான் தண்ணீர் கொடுக்கவேண்டிய சூழ்நிலை இங்கு ஏற்படும். ஆகவே இப்போது இருக்கின்ற முறையிலேயே தண்ணீர் கொடுக்க முன் வந்தால்தான் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மிக உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

Oil exploration in Thittacheri

* Q No. 380– THIRU S. J. SADIQ PASHA: Will the Hon. Chief Minister be pleased to state

(a) whether the Oil and Natural Gas Commission is engaged in oil exploration in Tamil Nadu;

(b) whether it is a fact that in the well known as 'Karaikal 10' oil is struck in Thittacheri in Thiruchy district, and

(c) whether the Government are aware that Oil and Natural Gas Commission has a proposal to move the staff and the machinery engaged in oil exploration from Thittacheri to Rajamandry?

1979 மார்ச் 14]

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) ஆம். எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழு தமிழகத்தில் காவிரி ஆற்றுப் பள்ளத்தாக்கிலும், பால்க் சந்தி, மன்னார் வளைகுடாவின் கரையோரங்களிலும் தற்பொழுது எண்ணெய் கண்டுபிடிப்பதில் ஈடுபட்டுள்ளது,

(ஆ) ஆம். எண்ணெய் மற்றும் இயற்கை வாயுக் குழு தஞ்சை மாவட்டம், நன்னிலம் வட்டம், திட்டச்சேரி கிராமத்திற்கருகில் காரைக்காலுக்கு எட்டு கிலோ மீட்டர் தென்மேற்கிலுள்ள ''காரைக்கால்—10'' என்னும் பெயருள்ள கிணற்றில் சிறிதளவு எண்ணெய் கிடைப்பதாக அறிவித்துள்ளது. நில மட்டத்திற்கு 1,650 மீட்டர் ஆழத்தில் காணப்படுகின்ற இவ்வெண்ணெய் வணிக மதிப்பற்றதாகும்,

(இ) ஆம். கடந்த 13 மாதங்களாக காரைக்கால் பகுதியில் துளைபோடும் இயந்திரங்கள் இல்லாததால் துளை போடும் குழுவினர் மாற்றப்பட்டனர். ஆய்வுக்குழுவினரும் பகுதிப் பிரிவினரும் இப்பகுதியில் தொடர்ந்து வேலை செய்வார்கள்.

திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சில இடங்களில் எண்ணெய் கிடைக்குமா என்கின்ற பரிசோதனை நடத்துவதற்கான முயற்சிகளை மேற்கொண்டிருப்பதாகச் சொன்னார்கள். அதில் காவேரி பகுதிகளில் நடைபெற்ற முயற்சிகள் வெற்றிகரமாக எண்ணெய் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதா? அவ்விதம் கண்டு பிடிக்கப்பட்டதில் பெட்ரோலியம் எண்ணெய் அதில் இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதா? இதிலுள்ள இயந்திரங்களை வேறு இடங்களுக்கு மாற்றியிருக்கிறார்கள் என்று சொல்லப்பட்டது. இதை மத்திய சர்க்காரிடம் வற்புறுத்தி அந்த இயந்திரங்களை மீண்டும் வரவழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ''காரைக்கால்—10'' என்கிற இடத்திலுள்ள கிணற்றில் எண்ணெய் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது. ஆனால் அது வணிக ரீதியில் இருக்குமா என்ற ஐயப்பாடும் இருக்கின்றது. மேலும், துளைபோடும் இயந்திரம் டான்சானியாவுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஏன் அப்படி அனுப்பினார்கள் என்று நான் பார்த்த அளவில் எனக்கும் விவரம் தெரியவில்லை. மத்திய சர்க்காருக்கு தமிழகத்தைவிட டான்சானியா முக்கியமாக இருந்திருக்கலாம்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, காவேரி வட்ட பகுதிகளில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டி எண்ணெயை வெளிக்கொணரவேண்டும் என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் மிகவும் பாடுபட்டார்கள். இடையில் இயற்கை அவரை நம்மிடமிருந்து பிரித்துவிட்டது. ஆகவே

இன்றைய அரசு—பல நல்ல காரியங்களை நடத்தவேண்டும் என்று எண்ணுகின்ற இந்த அரசு—எரிவாயு குழுவினரிடம் இதை எடுத்துக்கூறி காவேரி டெல்டா பகுதிகளிலுள்ள எண்ணெயை வெளி கொணருவதற்கானக் முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபடுவதற்கு முன்வருமா?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: இந்த அரசு தொடர்ந்து மத்திய அரசை இதற்காக வற்புறுத்தும்.

[முற்பகல் 9-10]

திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே உள்ள எண்ணெய் கண்டுபிடிக்கும் எந்திரத்தை டான்சானியாவுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்றால், அதற்குப் பொறுப்பான மத்திய பெட்ரோலிய அமைச்சர் மீது ஒரு கண்டனத் தீர்மானத்தை இந்தச் சபையில் கொண்டுவர இந்த அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, கண்டனத் தீர்மானம் தேவையில்லை. மீண்டும் வற்புறுத்தினாலே போதும்.

வடபாதிமங்கலத்தில் கரும்புப் பண்ணைக் கழகத்திற்குச் சொந்தமான நிலம்

* வினா எண் 381—திரு. மு. அம்பிகாபதி: மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தமிழ்நாடு கரும்புப் பண்ணைக் கழகத்தைச் சேர்ந்த வடபாதிமங்கலம் பகுதியில் உள்ள கழகத்திற்குச் சொந்தமான நிலம் எவ்வளவு?

(ஆ) இதில் வேலை பார்க்கும் தொழிலாளர்கள் எவ்வளவு பேர்?

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: (அ) இந்நிறுவனத்திற்குச் சொந்தமாக வடபாதிமங்கலம் பகுதியில் 3,910 ஏக்கர் 71 சென்ட் நிலம் உள்ளது,

(ஆ) இக்கழகத்தில் 205 நபர்கள் நிரந்தரப் பணியாளர்களாகவும் 17 நபர்கள் தற்காலிகப் பணியாளர்களாகவும் வேலை செய்து வருகிறார்கள்.